பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

29 11 2026 SUNDAY 12.40 PM

ஆகாஷ்வாணி

தலைப்புச் செய்திகள்

1. போதைப்பழக்கம் இல்லா இளைஞர்களின் இயக்கம் வலுப்பெற்று வருவதாக மன் கி பாத் உரையில் பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. நவீன போர் முறையில் செயற்கை நுண்ணறிவு மற்றும் சைபர் தொழில்நுட்பம் இன்றியமையாதது என்று பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

3. ஆரோக்கியமான இந்தியாவை உருவாக்குவதில் இளைஞர்களின் பங்கு முக்கியமானது என்று மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா குறிப்பிட்டுள்ளார்.

4. அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

5. சையத் மோடி சர்வதேச பேட்மிண்டன் போட்டியின் இறுதியாட்டத்தில் இன்று, இந்தியாவின் தன்வி சர்மா — தாய்லாந்தின் **Supanida Katethong** -ஐ எதிர்கொள்கிறார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

போதைப்பழக்கம் இல்லா இளைஞர்களின் இயக்கம் வலுப்பெற்று வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மக்களிடையே மனம் திறந்து பேசும் மன் கி பாத் நிகழ்ச்சியில் அவர் இவ்வாறு கூறினார்.

(Sound Byte — இளைஞர்கள் (1) - 55 Sec .)

லட்சக்கணக்கான அரசு பணியாளர்கள் **iGOT** கர்மயோகி டிஜிட்டல் தளத்தின் உதவி மூலம், சிறப்பு பயிற்சி வகுப்பு பெற்று வருவதாக அவர் தெரிவித்தார்.

(Sound Byte — iGOT கர்மயோகி டிஜிட்டல் (2) - 42 Sec .)

Sanchar Saathi டிஜிட்டல் தளம், தொலைந்துபோன கைபேசிகளை கண்டுபிடிக்க உதவிகரமாக செயல்படுவதாக அவர் கூறினார்.

(Sound Byte — Sanchar Saathi (3) - 54 Sec .)

தமிழகத்தின் ஈரோட்டில் இயற்கையான பனைவெல்லம் முதல் முறையாக ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக பிரதமர் கூறினார்.

(Sound Byte — பனைசெல்லம் (4) - 47 Sec .)

உடற்பயிற்சியை மேற்கொள்வதற்காக ஞாயிறுதோறும் சைக்கிள் பயிற்சியில் 37 லட்சம் மக்கள் இணைந்துள்ளதாக பிரதமர் தெரிவித்தார்.

(Sound Byte — சைக்கிள் பயிற்சி (5) - 27 Sec .)

பிரதமர் 44உரையின் தமிழாக்கம் இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பு செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<<<>>>>>>

நவீன போர் முறையில் செயற்கை நுண்ணறிவு மற்றும் சைபர் தொழில்நுட்பம் இன்றியமையாதது என்று பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

மகாராஷ்ட்ரா மாநிலம் புனேயில் தேசிய பாதுகாப்பு அகாடமியின் பயிற்சி நிறைவு அணிவகுப்பை ஏற்றுக்கொண்டு உரையாற்றிய அவர், நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

ராணுவ சீருடை அணிவதன்மூலம், நாட்டை பாதுகாப்பதற்கான பொறுப்பு ஒவ்வொரு வீரருக்கும் உள்ளதை திரு ராஜ்நாத் சிங் சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்ச்சியில் **369** பயிற்சி பெற்ற வீரர்கள், ராணுவத்தில் இணைந்தனர்.

சிறப்பாக பயிற்சி முடித்த **Ankit Kumar Singh**-க்கு, குடியரசுத் தலைவரின் தங்கப்பதக்கமும், **Sartakraj Sagar Patil**-க்கு வெள்ளிப் பதக்கமும், **Rishi**-க்கு வெண்கலப் பதக்கமும் வழங்கப்பட்டது.

<<<<<<>>>>>>

ஆரோக்கியமான இந்தியாவை உருவாக்க இளைஞர்களின் பங்கு முக்கியமானது என்று மத்திய இளைஞர் நலன் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

மகாராஷ்ட்ரா மாநிலம் புனேயில், ஞாயிறுதோறும் சைக்கிள் பயிற்சியை தொடங்கிவைத்து பேசிய அவர், **250** இடங்களில் தொடங்கப்பட்ட இந்த சைக்கிள் பயிற்சி தற்போது நாடு முழுவதும் **40** ஆயிரம் இடங்களில் நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.

பொதுமக்களிடையே நல்ல ஆரோக்கியம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு

ஞாயிற்றுக்கிழமைகளிலும் இப்பயிற்சி தொடர்ந்து நடைபெற்று வருவதாக கூறினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் அழைப்புக்கு ஏற்ப, ஒவ்வொரு நாளும் **30** நிமிடம் உடற்பயற்சி மேற்கொள்ள வேண்டும் என்று அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

ஐந்து கிலோமீட்டர் தூரம் நடைபெற்ற சைக்கிள் பயிற்சியில் அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

<<<<<<>>>>>>

அமெரிக்காவில் நேரிட்ட நிலநடுக்கத்தால் லாஸ் ஏஞ்சலிஸ் சர்வதேச விமான நிலையத்தின் கண்ணாடிகள் உடைந்ததாக அம்மாநகர மேயர் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், விமான சேவைகள் பாதிக்கப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

ரிக்டர் அளவுகோலில் ஐந்தாக இந்த நிலநடுக்கம் பதிவானது.

Manhattan அருகே நேற்றிரவு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாகவும், இதன்மூலம், பெரிய அளவில் சேதம் ஏற்படவில்லை என்றும் அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

ஆப்கானிஸ்தானின் **Kunar** மாகாணத்தில் நேரிட்ட வெடிவிபத்தில் பள்ளி மாணவர்கள் பத்து பேர் உயிரிழந்துள்ளனர்.

Kunar மாகாணத்தின் தலைநகரமான **Asababad**-ல் உள்ள பள்ளி அருகே சுரங்கப் பணிகளுக்காக வைத்திருந்த வெடிமருந்துகள் வெடித்ததில் இந்த விபத்து ஏற்பட்டதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

இதில் **110**-க்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

படுகாயமடைந்த **15** பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

<<<<<<>>>>>>

இஸ்ரேலில் புதிய அரசின் மாற்று பிரதமராக பதவியேற்க தயாராக இருப்பதாக பிரதமர் திரு பெஞ்சமின் நெத்தன்யாகு தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், தேசிய அரசில் எதிர்க்கட்சித் தலைவர் **Gadi Eisenkot** முதலில் பிரதமராக பதவியேற்க ஒப்புதல் அளிக்கப்போவதாக கூறியுள்ளார்.

தமது கட்சி இரண்டு லட்சத்து **50** ஆயிரத்திற்கும் மேல் வாக்குகள் பெற்றிருந்த போதிலும், தாம் எதிர்க்கட்சித் தலைவர் பிரதமராக பதவியேற்க ஆதரவு அளிக்க தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

கடந்த அக்டோபர் **27**-ஆம் தேதி நடைபெற்ற இஸ்ரேல் நாடாளுமன்றத் தேர்தலில் எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலையில், அதிபர் **Isaac Hezog** ஆட்சி அமைக்க திரு **Gadi Eisenkot**-க்கு அழைப்பு விடுத்துள்ளார்.

அடுத்த மாதம் **6**-ஆம் தேதிக்குள் இதுதொடர்பான முடிவு எடுக்க வேண்டும் என்றும் அதிபர் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>>

சையத் மோடி சர்வதேச பேட்மிண்டன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் இன்று, இந்தியாவின் தன்வி சர்மா — தாய்லாந்தின் **Supanida Katethong** -ஐ எதிர்கொள்கிறார்.

லக்னோவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்தியாவின் திரிஷா ஜோலி — காயத்ரி கோபிசந்த் இணை, இந்தோனேஷியாவின் **Rinjani — Isyana** இணையை எதிர்கொள்கிறது.

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின், மூன்றாம் நாளான இன்று ஆட்டநேர இறுதியில் நியூசிலாந்து இரண்டாவது இன்னிங்சில் **3** விக்கெட் இழப்பிற்கு, **133** ரன் எடுத்துள்ளது.

Christchurch-ல் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியா தனது முதல் இன்னிங்சில் **246** ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

நியூசிலாந்து தற்போது **243** ரன் முன்னிலையில் உள்ளது.

ஆகாஷ் தீப் பேட் செய்தபோது ஹெல்மெட்டில் பந்து பட்டதால், அவருக்கு பதிலாக, வேகப்பந்து வீச்சாளர் பிரசீத் கிருஷ்ணா இந்திய அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

<<<<<<END>>>>>>